**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி**, B.A.,B.L.,
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**E.A.No.03/2025 in E.P.No.03/2024 in O.S.No.29/2018**

1. சாந்தி
2. ராஜசேகர்
3. லோகநாதன் ... மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளி/பிரதிவாதிகள்

**//எதிராக//**

1. பெரியம்மாள் (இறப்பு)
2. பாப்பாத்தி

... எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்பாக 07.11.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.M.சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.R.பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

நிறைவேற்று மனுவினை மறுதிறவு செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இம்மனுவை தனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளார். 2 ம் எதிர்மனுதாரர் வழக்கை தாக்கல் செய்து 24.06.2023 ல் தீர்ப்பு பெற்றுள்ளார். மேற்படி தீர்ப்பிற்கு எதிராக மனுதாரர்கள் மேல்முறையீடு செய்து வருவதாகவும் மேற்படி மேல்முறையீட்டில் தங்களுக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது என்றும், அதற்குள் எதிர்மனுதாரர்கள் இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்து விட்டார்கள் என்றும், இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் 1,2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும், மேற்படி சாட்சிகளை

குறுக்கு விசாரணை செய்ய போதிய ஆவணங்கள் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும், மேற்படி ஆவணம் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும் எனவே ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டுமென்றும் அவ்வாறு குறுக்கு விசாரணை செய்யாமல் விடுபட்டு போய்விட்டால் மனுதாரர்கள் தரப்பில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விடும் என்றும் எனவே மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறவு செய்யக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>**

2) மேற்படி வழக்கு 24.06.2023ல் தீர்ப்பு ஆனது உண்மை. மேற்படி வழக்கில் தற்போது வரை மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக பலமுறை வாய்தா போடப்பட்டும் மனுதாரர்கள் தரப்பில் மேற்படி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாமல் காலம் தாழ்த்தி வந்ததால் மேற்படி சாட்சிகளின் குறுக்கு விசாரணையானது முடிக்கப்பட்டு தற்போது எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டு சாட்சிகள் ஏதும் விசாரணை செய்யப்படாததால் மேற்படி சாட்சியம் முடிக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் மனுதாரர்கள் மேற்படி நிறைவேற்று மனுவை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவை தள்ளுடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் தங்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் விடுபட்டு போய்விட்டது என்றும் எனவே மேற்படி சாட்சியத்தை மீண்டும் திறவு செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை செய்யப்பட்டது. நிறைவேற்று மனுவில் மனுதாரர்களுக்கு நல்ல எதிர்வாதம் இருப்பதாக வாதிடப்பட்டது. எனவே அவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம்

முடிவு செய்கிறது. எனவே இம்மனுவானது நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்படலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/–ஐ செலவுத்தொகையாக 20.11.2025ம் தேதிக்குள் வழங்க வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகும் என உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 21.11.2025.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 14ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

***********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**E.A.No. 03/2025**
**in**
**E.P.No. 03/2024**
**in**
**O.S.No. 29/2018**

**DRAFT / FAIR ORDER**

**D.D.14.11.2025**

***********************************